**கஹவத்த பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

**------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 09 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கஹவத்த பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் 2016 நவம்பர் 18 ஆந் திகதி வரையில் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 3,787,548 கூட்டுத்தொகையான கடன் மீதியொன்று அவதானிக்கப்பட்டதுடன் கடனைத் தீர்ப்பதற்கு 2017 யூன் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 24 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகளை இனங்கண்டு எல்லையை அடையாளப்படுத்தி பாதைகள் மற்றும் ஒழுங்கைகள் தொடர்பான பதிவேடொன்று வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 104 | உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சிலிருந்து சபைக்குக் கிடைக்கப் பெற்ற டபள்கப் வண்டி 2016 செப்தெம்பர் 09 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 110 | சபையினால் இழப்பு மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,927,310 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,277,750 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 4,649,560 தொகையான அதிகரிப்பு காணப்பட்டது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவு ரூபா 4,649,560 இனால் அதிகரித்தமை தொடர்பில் 05 வருமான விடயங்களில் ரூபா 3,739,067 அதிகரிப்பும், 01 செலவின விடயத்தில் ரூபா 1,272,415 குறைவும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | பாதீடு செய்யப்பட்ட | உள்ள படியான | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரியும் வரியும் | 3,258 | 3,413 | 2,274 |
| வாடகை | 6,979 | 4,506 | 600 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 314 | 322 | - |
| ஏனைய வருமானம் | 51,435 | 33,102 | 13,523 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது வாடகை வருமானம், சேவைகளுக்கான கட்டணம், பிடியாணைக் கட்டணமும் தண்டப் பணமும், ஏனைய வருமானம் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு முறையே 35 சதவீதம், 15 சதவீதம், 40 சதவீதம், 55 சதவீதம் மற்றும் 44 சதவீதம் என பாரியளவில் குறைவொன்றைக் காட்டியது.

### 2.3.3 ஆதனவரி

2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையில் 662 ஆதனவரி அலகுகளிலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 2,246,810 தொகையான நிலுவை ஆதனவரி மீதியொன்று காணப்பட்டதுடன், அந்த மீதியில் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 96 ஆதனவரி அலகுகளில் கூட்டுமொத்தமாக ரூபா 1,398,500 அதாவது மொத்த நிலுவை மீதியில் 62 சதவீதமாக இருந்தது.

**2.3.4 வாடகை**

-------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் மீளாய்வாண்டிற்கான களியாட்ட வரியாக அறவிட வேண்டிய வருமானத்தின் சதவீதம் வர்த்தமானியின் மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் 41 அலகுகளில் ஏக்கர் வரியின் கூட்டுமொத்தமாக ரூபா 71,143 நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் 2016 நவம்பர் 18 ஆந் திகதி வரையும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கஹவத்த பழைய சந்தையை உடைத்து அகற்றி 48 கடைகளையுடைய புதிய சந்தை 2016 யூலை 12 ஆந் திகதியளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், 32 கடைகள் 2017 மார்ச் 10 ஆந் திகதி வரையும் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பழைய சந்தையில் வியாபார நடவடிக்கைகளைச் செய்த 14 வியாபாரிகள் புதிய சந்தையில் 15 கடைகளில் வியாபார நடவடிக்கைகளை செய்துவருவதுடன் புதிய மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் கடை வாடகை அறவிடப்படாமல் பழைய வாடகை அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபை நிதியத்திற்கு ரூபா 98,348 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

-----------------------------------------------------

1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களில் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க 2008 சனவரி 25 ஆந் திகதிய 1523/16 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் ‘‘இ’’ பகுதியில் குறிப்பிடப்பட்ட செயற்திட்டம் தொடர்பாக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரமொன்று விநியோகிக்கும் போது 03 வருடங்களின் பின்னர் அனுமதிப்பத்திரம் புதுபிக்கப்பட வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சபையினால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் அவ்வாறு புதுபிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது 02 கைத்தொழில்களுக்காக மாத்திரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2016 நவம்பர் 18 ஆந் திகதி வரையிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய கைத்தொழில்கள் தொடர்பான மெய்மையாய்வொன்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.3.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

02 காணிப் பதிவாளர் அலுவலகங்களிலிருந்து மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 557,800 கூட்டுத் தொகையான முத்திரைக் கட்டணம் 2016 நவம்பர் 18 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்ததுடன் ஒரு காணிப்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணம் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளின் பிரகாரம் ரூபா 14,300,000 கூட்டுப்பெறுமதியான 65 செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டு மீளாய்வாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் 39 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு தவறியிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 பெப்ரவரி 14 ஆந் திகதிய உள்ளகக் கணக்காய்வு பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த 13 விடயங்களுக்குரிய 29 அலகுகளின் பொருள் பற்றாக்குறை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 93,180,390 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக விரிவான பட்டோலை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போதும் கணக்காய்வினால் இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அது தொடர்பாக உரிய சீராக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான 26 மயான நிலங்கள் காணப்படுகின்ற போதும், அதில் 02 ஐ மாத்திரம் அளவை செய்வதற்கான நடவடிக்கை

எடுக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி 24 மயான நிலங்களையும் சபைக்குக் கையேற்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2008 ஆம் ஆண்டின் போது சபைக்குக் கிடைக்கப் பெற்ற கெப் வண்டி நீண்டகாலமாக உடைந்த நிலையில் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனத்தை ஏலத்தில் விற்பனை செய்வதற்காக 2015 மே 11 ஆந் திகதி உள்ளூராட்சித் திணைக்களத்திடம் அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும், உரிய அங்கீகாரத்தைப் பெற்று விற்றுத் தீர்ப்பதற்காக 2017 மார்ச் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126(ix)(ஆ) பிரிவின் பிரகாரம் மலம் அகற்றல் மற்றும் கழிவுகளை அகற்றுதல் மற்றும் அதற்கான கட்டணங்களை அறவிடல், உப விதி விடயங்களில் ஒன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், சபையினால் கழிவுகளை அகற்றுதல் தொடர்பாக உப விதியொன்றை விதிப்பதற்காக 2016 நவம்பர் 16 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 95 ஆவது பிரிவின் பிரகாரம் வீதிகளில் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள், வீடுகளில் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள், மலம் மற்றும் அவ்வாறான பொருட்களை உரிய பிரகாரம் அகற்றுவதற்கு இலகுவான இடங்கள் காலத்திற்குக் காலம் ஒவ்வொரு பிரதேச சபையினாலும் வழங்க வேண்டியிருந்ததுடன், அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அகறப்படுகின்ற அந்த கழிவுகள், மலம் அல்லது அவ்வாறான கழிவுப் பொருட்கள் நோய்களை ஏற்படுத்தும் வகையில் அகற்றப்படாமலிருப்பதை கண்காணிப்பதற்குத் தேவையான சகல வேலைத்திட்டங்களும், முற்பாதுகாப்பு ஏற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் நகரத்தில் சேகரிக்கப்படுகின்ற உக்கும் மற்றும் உக்காத சகல கழிவுப்பொருட்களும் ஹவுபெவத்த பிரதேசத்தில் சபைக்கு உரித்தற்ற திறந்த காணியொன்றில் போடப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் அந்தப் பிரதேசத்திற்கு அருகில் ஈக்கள் பெருகியமையால் பொதுமக்கள்

நோய்களுக்கு உட்படுகின்றமையால் பொதுமக்களின் எதிர்ப்பு எழுத்திருந்தது. அதன் பிரகாரம் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கு முறையான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக முன்னைய கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும், சபை கவனத்தைச் செலுத்தி இந்த சுற்றாடல் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக துரிதமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தவறியிருந்தது.

## 3.4 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபையினை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சபையினால் 2015 ஆம் ஆண்டின் யூலை முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியில் ரூபா 4,584,575 தொகையான செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதற்காக உள்ளுராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சிலிருந்து ரூபா 3,421,885 தொகை மாத்திரம் கிடைத்திருந்த போதும் மிகுதி 1,162,690 தொகை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) ‘‘தொறின் தொறட்ட கமின் கமட்ட’’ (வீட்டிற்கு வீடு கிராமத்திற்கு கிராமம்) பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய திட்டத்தின் கீழ் கிராமிய வீதி அபிவிருத்திக்கான 11 பல்வேறு செயற்திட்டத்திற்காக 2014 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட சங்கத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டு நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட அந்த வேலைகளுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 2,946,111 சபையினால் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சிலிருந்து உரிய நிதி பெறப்பட்டு பொறுப்புக்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 32 செலவின விடயங்களுக்குரிய ரூபா 4,911,000 கூட்டுத் தொகையான மொத்த நிதிஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் வேண்டப்படுகின்றது.

| **முறைமைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) வகைப்படுத்தல் வழு<br>(ii) கணக்குகளிலிருந்து கைவிடல்<br>(iii) ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படாமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | நிர்ணயிக்கப்பட்ட வருமானங்கள் அறவிடப்படாமை |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | நிதி ஏற்பாட்டின் குறைவான பயன்பாடு |
| (ஈ) கழிவுப் பொருள் முகாமைத்துவம் | முறையான வகையில் அகற்றப்படாமை |
| (உ) பதிவேடுகளைப் பேணிச் செல்லல் | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை. |